வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 25.05.2026 திங்கட்கிழமை இதழ் : 139 பக்கங்கள் : 08

# எரிபொருள்களின் விலை விரைவில் அதிகரிக்கலாம்!

## நாணய நிதியம் விதித்த நிபந்தனையால்

கொழும்பு, மே. 25

**சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் விரைவில் எரிபொருள்களின் விலைக்ள் அதிகரிக்கப்படலாம் என்று தெரிய வந்துள்ளது.**

**விஸ்தரிக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் இலங்கையின் ஒருங்கிணைந்த ஐந்தாவது மற்றும் ஆறாவது மீளாய்வுகளை நிறைவு செய்வது, சர்வதேச நாணய நிதியத்தின் செயற்குழுவின் ஒப்புதலுக்கு உட்பட்டது என்று சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது.**

செய்தியாளர் சந்திப்பொன்றில் கருத்து வெளியிட்ட சர்வதேச நாணய நிதியத்தின் தகவல் தொடர்புத் துறையின் இயக்குர் ஜூலி கொசாக், கடந்த ஏப்ரல் 9ஆம் திகதி சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்கும் இலங்கை அரசின் முக்கியஸ்தர்களுக்கும் இடையே ஒரு அதிகாரிகள் மட்டத்திலான இணக்கப்பாடு எட்டப்பட்டதாகக் குறிப்பிட்டுள் ளார்.

செயற்குழுவின் ஒப்புதலுக்காக இந்தத் திட்டத்தைச் சமர்ப்பிப்பதற்கு முன்பு, இலங்கை பல பூர்வாங்க நடவடிக்கைகளை முடிக்க வேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மின்சாரம் மற்றும் எரிபொருளுக்கான செலவை உள்ளடக்கும் வகையில் விலை நிர்ணய சூத்திரங்களைச் செயல்படுத்துதல், நலிவடைந்த மற்றும் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களைப் பாதுகாப்பதற்கான நிவாரண வழிமுறைகளைச் செயல்படுத்துதல் மற்றும் நிதி உத்தரவாதங்களை நிறைவு செய்தல் ஆகியவை இதில் அடங்கும்.

செயற்குழுவின் ஒப்புதலைத் தொடர்ந்தே, இலங்கைக்கு சுமார் 700 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி 07

## எரிபொருள்களுக்கான மானியம் நீண்டகாலத்துக்கு சாத்தியமற்றது

கொழும்பு, மே. 25

அரசாங்கத்தினால் தற்போதைக்கு வழங்கப்பட்டு வரும் எரிபொருள் மானியம் நீண்ட கால அடிப்படையில் சாத்தியமற்றது என்று பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறிப்பாக எதுவித வரியும் அறவிடப்படாத நிலையில் ஒரு லீற்றர் டீசலை நாட்டுக்கு இறக்குமதி செய்வதற்கான செலவு அண்ணளவாக 410 ரூபாவாக இருப்பதால், தற்போதைய விலையான 392 ரூபாவுக்கு அதனை விற்பனை செய்வது நீண்ட கால அடிப்படையில் சாத்தியமில்லை என்று பொருளாதார ஆய்வாளர் தனநாத் பெர்னாண்டோ வலியுறுத்தியுள்ளார்.

எரிபொருள் விநியோகஸ்தர்களுக்கு வழங்கப்படும் தரகுப் பணம் அல்லது எந்த வரியையும் சேர்க்காத நிலையில் கூட, தற்போதைய உலக சந்தை விலையின்படி ஒரு லீற்றர் டீசலின் விலை அண்ணளவாக 409 முதல் 410 ரூபா வரை உள்ளது என்று அவர் சுட்டிக்காட்டுகிறார்.

அத்தகைய சூழ்நிலையில், 410 விலைமதிப்புள்ள ஒரு லீற்றர் டீசலை எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் 392 ரூபாவுக்கு விற்பனை செய்வது நடைமுறைக்கு சாத்தியமில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

எரிபொருளுக்கு அரசாங்கம் பெரும் மானியம் வழங்குவதாகக் குறிப்பிட்டுள்ள அவர், தற்போது ஒரு லீற்றர் டீசலுக்கு சுமார் 100 ரூபாவும்இ ஒரு லீற்றர் பெற்றோலுக்கு 20 ரூபாவும் மானியமாக வழங்க ப்படுகிறது என்று தெரிவித்துள்ளார். 07

## அமெரிக்க டொலரின் மதிப்பு வீழ்ச்சியடையும்

### அமைச்சர் பிமல் நம்பிக்கை



கொழும்பு, மே. 25

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கிடைக்கவுள்ள நிதி உதவிகள் மற்றும் அரசாங்கத்தின் நிலையான பொருளாதார வேலைத்திட்டங்கள் காரணமாக, இலங்கை 07

## மாகாண சபைத் தேர்தல் அடுத்த ஆண்டே நடக்கும்!

### யாழ்ப்பாணத்தில் கூறினார் ரில்வின்

யாழ்ப்பாணம், மே. 25

மாகாண சபையை அடுத்த ஆண்டே நடத்தக்கூடிய சாதகம் காணப்படுவதாக மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் தேசிய மக்கள் சக்தியின் அலுவலகத்தை திறந்து வைத்த பின்னர், 07

## அரசாங்கத்தின் வெளிநாட்டு கடன் தொகை அதிகரிக்காது!

### மத்திய வங்கி ஆளுநர் கூறுகிறார்



கொழும்பு, மே. 25

ரூபாயின் மதிப்பு வீழ்ச்சியடைந்துள்ளதன் காரணமாக அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடன் தொகை ஒருபோதும் அதிகரிக்கப்பட மாட்டாது என மத்திய வங்கி ஆளுநர் 07

## அத்தியாவசியமற்ற பொருள்களின் இறக்குமதிக்கு மீளவும் கட்டுப்பாடு?

கொழும்பு, மே. 25

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவின் ஆட்சிக் காலத்தில் விதிக்ப்பட்டிருந்ததை போன்று அத்தியாவசியமற்ற பொருள்களின் இறக்குமதிக்கு மீண்டும் கட்டுப்பாடுகள் விதிப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக தெரியவந்துள்ளது.

கொழும்பு ஊடகமொன்று அரசாங்கத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவரை மேற்கோள்காட்டி குறித்த செய்தியை வெளியிட்டுள்ளது.

அந்த செய்தியில் தொடர்ந்தும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

மேற்கு ஆசியாவில் ஏற்பட்ட பிராந்திய மோதல்களால் 07

## ரூபாவின் மதிப்பு திடீர் உயர்வு

கொழும்பு, மே. 25

கடந்த சில நாள்களாக வீழ்ச்சியடைந்து வந்த இலங்கை ரூபாவின் மதிப்பு, வெள்ளிக்கிழமை 07

## நாளை முதல் தீவிரமாகும் தென்மேற்குப் பருவமழை!

கொழும்பு, மே. 25

எதிர்வரும் மே 26 அல்லது 27 ஆம் திகதிகளில் தென்மேற்குப் பருவப்பெயர்ச்சி காலநிலை நாட்டை வந்தடையக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதனால் நாட்டின் தென்மேற்கு பகுதிகளில் மழை வீழ்ச்சி அதிகரிக்கக்கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இன்றைய வழமையான வானிலையே 07

## சீரற்ற காலநிலை: 31,072 பேர் பாதிப்பு!

கொழும்பு, மே. 25

இரத்தினபுரி உட்பட 08 மாவட்டங்களில் நிலவும் மழையுடன்கூடிய சீரற்ற காலநிலையால் 31 ஆயிரத்துஇற்கு மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

7 ஆயிரத்து 983 குடும்பங்களை சேர்ந்த 31 ஆயிரத்து 72 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 07

## செங்கோட்டையன் வைத்தியசாலையில்

சென்னை, மே. 25

தமிழகத்தின் மூத்த அமைச்சர் செங்கோட்டையன் திடீர் சுகவீனம் காரணமாக கோவையிலுள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் சேர்க்கப்பட்டுள்ளார்.

காய்ச்சல் காரணமாக அவர் சிகிச்சை பெற்று வருவதாக தமிழக ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அ.தி.மு.க.வின் முன்னாள் முக்கிய உறுப்பினரான செங்கோட்டையன், அண்மையில் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகத்தில் 07

## அகமதாபாத் - கொழும்பு இடையே ஜூன் முதல் நேரடி விமானச் சேவை

கொழும்பு, மே. 25

இலங்கையின் சுற்றுலாத்துறையை மேலும் ஊக்குவிப்பதற்கும், மேற்கு இந்தியாவுடனான வான்வழித் தொடர்புகளை விரிவுபடுத்துவதற்கும் ஏதுவாக, இந்தியாவின் அகமதாபாத் மற்றும் கொழும்பு ஆகிய நகரங்களுக்கு இடையே எதிர்வரும் ஜூன் 19 ஆம் திகதி முதல் புதிய நேரடி விமானச் சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இலங்கையின் தனியார் விமானச் சேவை நிறுவனமான பிட்ஸ்எயார் இந்த வழித்தடத்தில் 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியம் என்ற போர்வையில் அரசியல் செய்வோரிடம் ஏமாறாதீர்!

## யாழ்ப்பாணத்தில் கூறினார் ரில்வின் சில்வா

யாழ்ப்பாணம், மே. 25

தேசிய மக்கள் சக்தி, இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பால், அனைத்து மக்களுக்கும் சமத்துவமான உரிமைகளையும், நீதியையும் பெற்றுக் கொடுப்பதில் உறுதியாக இருக்கின்றது. எனவே தமிழ் மக்கள் தொடர்ந்தும் தேசிய மக்கள் சக்தியினருக்கு ஆதரவு வழங்க வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய அரசியல் என்ற போர்வையில் அரசியல் செய்வோரிடம் இனியும் ஏமாறவேண்டாம் என்றும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் தேசிய மக்கள் சக்தியின் அலுவலகத்தை திறந்து வைத்த பின்னர் , ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-கடந்த காலங்களில், தமிழ் தேசிய அரசியல் என்ற போர்வையில், மக்களை உணர்ச்சி வசப்பட வைத்து, வாக்குகளைப் பெற்று, தங்களது சுயநல அரசியல் தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்ட தமிழ் தலைமைகளை நாங்கள் தொடர்ச்சியாகப் பார்த்திருக்கின்றோம்.

அவர்கள் வடபகுதி மக்களின் உண்மையான வாழ்வாதாரப் பிரச்சனைகளுக்கோ, இளைஞர், யுவதிகளின் வேலை வாய்ப்புப் பிரச்சனைகளுக்கோ அல்லது பொருளாதார மேம்பாட்டுக்கோ எந்தவொரு நிலையான தீர்வையும் பெற்றுத்தரவில்லை.

இன்று, இலங்கையின் ஒட்டுமொத்த அரசியல் கலாசாரமும் மாற்றமடைந்து வருகின்றது. தென்னிலங்கை மக்கள் ஊழலற்ற, நேர்மையான, மக்கள் நலனை முதன்மையாகக் கொண்ட ஒரு புதிய அரசியல் பயணத்தை தேசிய மக்கள் சக்தியோடு இணைந்து தொடங்கியிருக்கின்றார்கள்.

அதே மாற்றத்தை, அதே புதிய அரசியல் யுகத்தை யாழ்ப்பாண மண்ணிலும் உருவாக்க வேண்டிய பொறுப்பு இங்குள்ள மக்களுக்கும் இருக்கின்றது. தேசிய மக்கள் சக்தி, இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பால், அனைத்து மக்களுக்கும் சமத்துவமான உரிமைகளையும், நீதியையும் பெற்றுக்கொடுப்பதில் உறுதியாக இருக்கின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் விவசாயம், மீன்பிடி, மற்றும் கல்வித்துறை சார்ந்த உள்கட்டமைப்புகளை மேம்படுத்தி, இப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கான தெளிவான பொருளாதாரத் திட்டங்களை எமது கட்சி பாராளுமன்றத்தில் முன் வைத்து வருகிறது.

எனவே, இனியும் ஏமாற்று அரசியல்வாதிகளின் வெற்று முழக்கங்களை நம்பி ஏமாறாமல், உங்கள் எதிர்கால சந்ததியின் வாழ்வு சிறக்க, ஊழலற்ற, தூய்மையான அரசியலை முன்னெடுக்கும் தேசிய மக்கள் சக்திக்கு இங்குள்ள மக்களும் பெரும் ஆதரவை தொடர்ச்சியாக வழங்க வேண்டும்-என்றார். (அ)

# திருமலையில் 2 எண்ணெய் தொட்டிகள் புனரமைப்புப் பணிகள் நிறைவடைவு

## ஆயினும் பயன்படுத்தமுடியாத நிலைமை

கொழும்பு, மே. 25

திருகோணமலை எண்ணெய் தொட்டி வளாகத்தில் உள்ள இரண்டு எண்ணெய் தொட்டிகளின் புனரமைப்பு பணிகள் நிறைவடைந்துள்ள போதிலும், குழாய்த்தொடர் இணைப்புகள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் பூர்த்தி செய்யப்படாததால் அவற்றை இன்னும் பயன்படுத்த முடியவில்லை என எரிசக்தி பிரதி அமைச்சர் அர்க்காம் இலியாஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை பெற்றோலிய பொது சேவை சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், ஆரம்பிக்கப்பட்ட நான்கு தொட்டிகளில் இரண்டு தொட்டிகளின் பணிகள் முடிவடைந்துள்ளதாகவும், ஏனைய இரண்டு தொட்டிகள் தற்பொழுது பழுதுபார்க்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கான குழாய்த்தொடர் அமைப்பதற்கான கேள்வி கோரல் அடுத்த மாதம் வெளியிடப்படவுள்ளதுடன், 18 மாதங்களுக்குள் இந்த முழுமையான திட்டத்தையும் நிறைவு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் தினசரி உற்பத்தித் திறனை 50000 பீப்பாய்களில் இருந்து ஒரு இலட்சம் பீப்பாய்கள் வரை இரண்டு மடங்காக அதிகரிப்பதற்கான திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவ இயக்குநர் கலாநிதி மயூரா நெத்திகுமாரகே தெரிவித்துள்ளார்.

நான்கு வருடங்களில் கட்டி முடிக்கப்படவுள்ள இப்புதிய சுத்திகரிப்பு நிலையத்தின் மூலம் முதன்முறையாக ஒக்ரேன் 95 ரக பெற்றோலை உள்நாட்டிலேயே சுத்திகரிக்க முடியும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அத்துடன், நாட்டில் ஏற்படக்கூடிய திடீர் எரிபொருள் பற்றாக்குறையைத் தவிர்ப்பதற்காக, முத்துராஜவெல மற்றும் கொலன்னாவையில் உள்ள வெற்றுத் தொட்டிகளைப் பயன்படுத்தி 32 பில்லியன் ரூபாய் செலவில் நிரந்தர அவசர எரிபொருள் இருப்பு ஒன்றை உருவாக்குவதற்கான புதிய திட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# சந்தேக நபர்கள் இரண்டு பேர் போதைப் பொருளுடன் கைது!

## சாய்ந்தமருது பகுதியில் சம்பவம்

அம்பாறை, மே. 25

இரு வேறு இடங்களில் நீண்ட காலமாக போதைப் பொருட்களை விற்பனை செய்து வந்த சந்தேக நபர்களை சாய்ந்தமருது பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்திற்கு உட்பட்ட புறநகர் பகுதியில் நீண்ட காலமாக போதைப்பொருள்கள் விற்பனை செய்யப்படுவதாக அம்பாறை மாவட்ட புலனாய்வு உத்தியோகத்தருக்கு இரகசிய தகவல் கிடைக்கப்பெற்றிருந்தது.

குறித்த தகவலுக்கமைய சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் டி.எஸ்.இந்திக தலைமையிலான பொலிசார் விசேட தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது சாய்ந்தமருது-14 பிரிவில் வதியும் சந்தேக நபர் ஐஸ் போதைப் பொருள் 2220 மில்லி கிராம் உட்பட போதைப் பொருளை விற்று பெறப்பட்ட ஒரு தொகுதி பணத்துடன் கைதானார்.இதே வேளை மற்றுமொரு சந்தேக நபர் மாவடி பகுதியில் வைத்து கைதானார்.

அச்சந்தேக நபர் வசம் இருந்து ஹெரோயின் 2300 மில்லி கிராம் உட்பட ஐஸ் போதைப் பொருள் 60 மில்லிகிராம் பைக்கெற்றும் விற்பனைக்கு தயாராக வைத்திருந்த நிலையில் மீட்கப்பட்டது.

அத்துடன் இச்சந்தேக நபர்களிடம் இருந்து ஒரு தொகுதி பணமும் மீட்கப்பட்டது.

மேற்குறித்த பணம் போதைப்பொருள் விற்பனையில் சம்பாதிக்கப்பட்டிருக்கலாம் என பொலிஸார் ஆரம்பகட்ட விசாரணையில் குறிப்பிட்டனர். (அ)

# தகவல் அறியும் ஆணைக்குழுவை பலவீனப்படுத்த அரசாங்கம் முயற்சி

## ஊடக அமைப்புக்கள் கவலை

கொழும்பு, மே. 25

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதன் ஊடாக தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவை பலவீனப்படுத்த அரசாங்கம் முயற்சிப்பதாக ஊடக அமைப்புகள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் கவலை வெளியிட்டுள்ளன.

ஊடக அமைப்புகளுக்கும் வெகுஜன ஊடக பிரதி அமைச்சர் கலாநிதி கௌசல்யா ஆரியரத்னவுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே இந்த விடயம் குறித்து ஆராயப்பட்டுள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டு ஆணைக்குழுவின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்த அரசாங்கம் முயல்வதாக இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கம் குற்றம் சாட்டியுள்ளதுடன், பொதுமக்களின் தகவல் அறியும் உரிமையைக் கட்டுப்படுத்தும் எந்தவொரு முயற்சிக்கும் எதிராகப் பாரிய போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என எச்சரித்துள்ளது.

தற்பொழுது தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவில் ஊழியர் பற்றாக்குறை, சட்ட நிபுணர்களின்மை மற்றும் குறைந்த ஊதியம் போன்ற காரணங்களால் அதன் செயல்பாடுகளில் பாரிய முடக்கம் ஏற்பட்டுள்ளதாக ஊடகப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனினும், இந்தக் குற்றச்சாட்டுகளை முற்றாக நிராகரித்துள்ள பிரதி அமைச்சர் கலாநிதி கௌசல்யா ஆரியரத்ன, தகவல் அறியும் உரிமையைக் கட்டுப்படுத்தும் எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை என பாராளுமன்றத்தில் தெளிவுபடுத்தியுள்ளார்.

தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவை மேலும் வலுப்படுத்துவதற்காக ஊடக சமூகத்தினர் அல்லது சிவில் அமைப்புகள் சட்டத் திருத்தங்களை விரும்பினால், அதற்கு அரசாங்கம் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டுள்ள அவர், ஆணைக்குழுவின் பணிகளை டிஜிற்றல் மயமாக்குவதற்கும், ஊழியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கும் தற்பொழுது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். (அ)




# டீசல் விலை அதிகரிக்கும்!

கொழும்பு, மே. 25

அடுத்த சில வாரங்களில் ஒரு லீற்றர் டீசலின் விலை நூற்று ஐம்பது ரூபாயினால் அதிகரிக்கக்கூடும் என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் எச்சரித்துள்ளார்.

பொதுக்கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், மின்சாரக் கட்டணக் குறைப்பு, வரிக் குறைப்பு மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலைக்குறைப்பு ஆகிய வாக்குறுதிகளை வழங்கி ஆட்சிக்கு வந்த தற்போதைய அரசாங்கம், அதற்கு மாறாக மின்சாரக் கட்டணங்களை டிசம்பரில் அதிகரித்துள்ளதாகக் குற்றம் சாட்டினார். (அ)

# காரைதீவு கண்ணகை அம்பாளின் திருக்குளிர்த்திச் சடங்கு ஆரம்பம்

காரைதீவு, மே. 25

வரலாற்றுப்பிரசித்திபெற்ற காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த வைகாசி திருக்குளிர்ச்சி சடங்கு இன்று திகதி திங்கட்கிழமை மாலை கடல்தீர்த்தம் எடுத்துவந்து திருக் கல்யாணக்கால் நடலுடன் ஆரம்பமாகவுள்ளது.

ஆலயத்திலிருந்து தர்மகர்த்தாக்கள் கப்புகனார் சகிதம் பக்தர்கள் கடலுக்குச்சென்று தீர்த்தம் எடுத்து வரும்வழியில் கல்யாணக்கால் முறித்து அதனைக் கொணர்ந்து கிரியைகள் செய்து ஆலயத்தில் நடுவார்கள்.

தொடர்ந்து ஏழு நாள்கள் பயபக்தியுடன் சடங்குகள் நடைபெற்று ஜூன் 02ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதி காலை 4.30மணிக்கு திருக்குளிர்த்தி பாடலுடன் சடங்கு நிறைவடையும்.

சடங்குகள் அனைத்தும் ஆலய கப்புகனார் தலைமையில் நடைபெறும். சடங்கு நாள்களில் ஊர் சுற்றுக்காவியம் பாடுதலுடன் பச்சைகட்டல் நிகழ்வும் இடம் பெறும். ஜூன் 01ஆம் திகதி திங்கள் கிழமை காலையில் மடிப்பிச்சை எடுக்கும் நிகழ்வும் பி.ப. 3மணிக்கு பொங்கலுக்கு நெற்குத்தும்வைபவமும் நடைபெறும்.

அதேவேளை ஜூன் 08ஆம் திகதி எட்டாம் சடங்குப் பூஜை இடம்பெறும் எனவும் அன்று பொங்கலிடுபவர்கள் நேர்கடன் கொடுப்பவர்கள் நேரகாலத்துடன் நிறைவுசெய்து விடவேண்டுமென ஆலய பரிபாலனசபையினர் அறிவித்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu
25.05.2026 திங்கட்கிழமை

பராபவ வருடம், வைகாசி 11

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# வடக்கில் அரசியல் வகுப்பெடுக்கும் ஜே.வி.பி. தலைவர்கள்

ஆளும் தேசிய மக்கள் சக்தியின் தலைமைத்துவக் கட்சியான ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) வின் தலைவர்கள் வடக்கிற்கு விஜயம் செய்யும் சந்தர்ப்பங்களில் எல்லாம் உரையாற்றும் பொதுக்கூட்டங்களிலும் செய்தியாளர்கள் மகாநாடுகளிலும் தமிழ் மக்களுக்கு அரசியல் படிப்பிப்பது போன்று கருத்துக்களை தெரிவிப்பதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள்.

ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா ஏற்கெனவே பல தடவைகள் யாழ்ப்பாணத்துக்கு வந்துபோயிருக்கிறார். கடந்த சனிக்கிழமை அவர் யாழ்ப்பாணத்தில் தேசிய மக்கள் சக்தியின் மாவட்ட புதிய அலுவலகத்தை திறந்து வைப்பதற்கு வந்தார். அலுவலகத்தை திறந்து வைத்த பின்னர் செய்தியாளர்களுடன் பேசியபோது அவர் தமிழ்க் கட்சிகளின் அரசியல்வாதிகளை நம்பி இனிமேலும் தமிழ் மக்கள் ஏமாறக்கூடாது என்று ஆலோசனை கூறினார்.

"கடந்த காலங்களில் தமிழ்த் தேசியவாத அரசியல் என்ற போர்வையில் மக்களை உணர்ச்சிவசப்பட வைத்து வாக்குகளைப் பெற்று தங்களது சுயநல அரசியல் தேவைகளைப் பூர்த்திசெய்துகொண்ட அரசியல்வாதிகளின் வெற்று முழக்கங்களை நம்பி தமிழ் மக்கள் இனிமேலும் ஏமாறக்கூடாது. தமிழ்த் தேசிய வாதம் பேசும் அரசியல் தலைவர்கள் வடபகுதி மக்களின் உண்மையான அடிமட்டப் பிரச்சினைகளை தீர்க்கத் தவறிவிட்டனர்.

"தென்னிலங்கை மக்கள் ஊழலற்ற, நேர்மையான மக்கள் நலனை முதன்மையாக் கொண்ட ஒரு புதிய அரசியல் பயணத்தை தேசிய மக்கள் சக்தியோடு இணைந்து தொடங்கியிருக்கிறார்கள். அதே மாற்றத்தையும் புதிய அரசியல் பயணத்தையும் வடக்கு மண்ணிலும் முன்னெடுக்க வேண்டிய பொறுப்பு தமிழ் மக்களுக்கு இருக்கிறது" என்று ரில்வின் சில்வா கூறினார்.

நாட்டில் முறைமை மாற்றத்தையும் புதிய அரசியல் கலாசாரத்தையும் கொண்டுவருவதாக வாக்குறுதி வழங்கி ஆட்சியதிகாரத்துக்கு வந்திருக்கும் தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து பயணம் செய்யுமாறு அவர் தமிழ் மக்களைக் கேட்கிறார்.

போரின் முடிவுக்கு பின்னரான காலப்பகுதியில் தமிழ் அரசியல்வாதிகளின் அணுகுமுறைகள் மற்றும் செயற்பாடுகள் குறித்து கடுமையான விமர்சனங்கள் இருக்கின்றன என்பது உண்மை. ஆனால், அவர்களுக்கு எதிராக விமர்சனங்களை முன்வைப்பதற்கு தனக்கும் ஜே.வி.பி.க்கும் தகுதியும் தார்மீக உரிமையும் குறித்து சில்வா முதலில் சிந்தித்துப் பார்த்திருக்க வேண்டும்.

தென்னிலங்கையில் புதிய அரசியல் பயணம் முன்னெடுக்கப்படுவதாக அவர் கூறுகிறார். அதில் "புதியதாக" என்ன இருக்கிறது? தவறான ஆட்சி முறைக்கு எதிரான அறகலய மக்கள் கிளர்ச்சிக்கு பிறகு தென்னிலங்கை மக்கள் மத்தியில் ஊழல் முறைகேடுகள் மற்றும் அதிகார துஷ்பிரயோகத்துக்கு எதிராக மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பது உண்மை.

பாரம்பரிய அதிகார வர்க்கத்தை பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் கட்சிகளை நிராகரித்த மக்கள் முன்னர் ஒருபோதும் ஆட்சியதிகாரத்தில் இருந்திராத ஜே.வி.பி.யை மக்கள் ஆட்சிக்கு கொண்டு வந்திருந்தாலும், சுதந்திர இலங்கையை சின்னாபின்மாக்கிய தேசிய இனப்பிரச்சினை மற்றும் அதன் மூலவேர காரணிகளைப் பற்றிய தென்னிலங்கை மக்கள் மத்தியில் சிந்தனையில் சிறிய மாறுதல் கூட ஏற்படவில்லையே.

மூன்று தசாப்தகால போருக்கு வழிவகுத்த அந்த பிரச்சினைக்கான அரசியல் தீர்வு குறித்த சிந்தனையில் நேர்மறையான மாற்றத்துக்கான அறிகுறிகள் தென்படாத வரையில் தென்னிலங்கை அரசியலில் புதிய பயணம் என்று எதுவும் முன்னெடுக்கப்படுவதாக உரிமை கோரமுடியாது.

இனப்பிரச்சினைக்கு தீர்வைக் காண்பதற்கென்று இதுகாலவரையில் மேற்கொள்ளப்பட்ட சகல முயற்சிகளையும் எதிர்த்துவந்த இருண்ட ஒரு கடந்த காலத்தைக் கொண்ட ஜே.வி.பி. அதிகாரப் பரவலாக்கத்துக்கு எதிரான அரசியல் நிலைப்பாடுகள் பெரும்பான்மைச் சமூகத்தவர்கள் மத்தியில் வலுவடைவதற்கு பெருமளவுக்கு பங்களிப்பைச் செய்திருக்கிறது.

சிறுபான்மைச் சமூகங்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகள் மற்றும் மனக்குறைகள் தொடர்பில் அதுவும் வடக்கு. கிழக்கில் 2024 தேசிய தேர்தல்களில் தமிழ் மக்களின் கணிசமான ஆதரவைப் பெற்ற பின்னரும் கூட தங்களது நிலைப்பாடுகளை மாற்றிக்கொள்வதற்கு முன்வராக ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் தமிழ்க் கட்சிகளை தமிழ் மக்கள் எவ்வாறு கையாள வேண்டும் ஆலோசனை சொல்வதற்கு எந்த அருகதையும் இல்லாதவர் என்பது ஈழநாட்டின் உறுதியான அபிப்பிராயமாகும்.

முதலில் அவர் தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் தென்னிலங்கை மக்களின் சிந்தனையில் ஆரோக்கியமான மாறுதல் ஏற்படக்கூடியதாக அரசியல் போதனையை செய்துவிட்டு பிறகு வந்து வடக்கில் வகுப்பெடுக்கட்டும்.

# இலங்கையில் சீன திட்டங்களுக்கு "தேவையற்ற வெளி அழுத்தம், முட்டுக்கட்டை"

## இந்தியாவை விமர்சிக்கிறாரா சீன தூதுவர்?

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சீனா முன்னெடுக்கும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு "தேவையற்ற வெளி அழுத்தங்கள்" முட்டுக்கட்டை போடுவதாக இலங்கைக்கான சீனத் தூதுவர் கி சென்ஹொங் பகிரங்கமாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

இப்பிராந்தியத்தில் சீன முதலீடுகளைத் தடுக்கும் "பிராந்திய மிரட்டல்" நடவடிக்கைகளைத் தமது நாடு வன்மையாக எதிர்ப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளதோடு, 2019-ஆம் ஆண்டு யாழ்ப்பாணத் தீவுகளில் திட்டமிடப்பட்ட மின்சாரத் திட்டம் நிறுத்தப்பட்டதால் சுமார் பத்தாயிரம் உள்ளூர் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

சீனத் தூதுவரின் இந்தக் கருத்துக்கள், இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் வெறும் நிலப்பரப்பாக அன்றி, இருபெரும் ஆசிய நாடுகளுக்கிடையேயான போட்டி பிராந்தியமாக மாறியுள்ளதை வெளிச்சமிட்டுக் காட்டுகின்றன. 2019-இல் யாழ்ப்பாணத் தீவுகளில் தொடங்கவிருந்த சீன மின்சக்தித் திட்டம் இந்தியா எதிர்ப்பு தெரிவித்ததைத் தொடர்ந்து இடைநிறுத்தப்பட்ட நிலையில், அதற்குப் பதிலாக இந்தியா அண்மையில் 11 மில்லியன் அமெரிக்க டாலர் மானியத்தில் தன்து சொந்த திட்டத்தைத் தொடங்கியுள்ளது. இதனைச் சீனா "பிராந்திய மிரட்டல்" எனக் குறிப்பிட்டாலும், இந்தியாவின் பார்வையில் இது தனது "பிராந்திய பாதுகாப்பு" தொடர்பான விவகாரமாகும்.

கடந்த 2019-ஆம் ஆண்டு ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன், யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு அருகிலுள்ள நயினாதீவு, நெடுந்தீவு மற்றும் அனலைதீவு ஆகிய மூன்று தீவுகளில் காற்றாலை மற்றும் சூரிய சக்தியை உள்ளடக்கிய "கலப்பு மின் உற்பத்தி" திட்டத்தை முன்னெடுப்பதற்கான சர்வதேச ஒப்பந்தத்தை சீனாவின் "சினோசார்-எடெக்வின்" நிறுவனம் வென்றிருந்தது.

இலங்கை அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் ஆரம்பிக்கப்படவிருந்த இத்திட்டம், இந்தியாவின் தென் மாநிலமான தமிழகக் கடற்கரையிலிருந்து வெறும் 50 கிலோமீற்றர் தொலைவில் அமைந்திருப்பதால், இந்தியாவின் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என புதுடில்லி கடும் எதிர்ப்பை வெளியிட்டது.

இதன் விளைவாக, இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் சீனாவின் மூலோபாயப் பிரசன்னத்தைத் தடுக்கும் நோக்கில், இலங்கை அரசாங்கம் அந்தச் சீன ஒப்பந்தத்தை இடைநிறுத்தியது. இறுதியில், 2024-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அதே திட்டத்தை இந்தியா தனது 11 மில்லியன் அமெரிக்க டாலர் முழுமையான "மானிய" நிதியுதவியுடன் பொறுப்பேற்று, தற்போது அதன் கட்டுமானப் பணிகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன. இதையே சீனத் தூதுவர் "வெளி அழுத்தம்" மற்றும் "முதலீட்டுத் தடை" என மறைமுகமாக குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய சர்ச்சைக்குரிய திட்டங்களின் கள நிலவரம் என்ன? சீனத் தூதுவர் குறிப்பிடும் அந்த "முட்டுக்கட்டைகள்" மற்றும் "முதலீட்டு முயற்சிகள்" எத்தகையவை என்பதைப் பின்வரும் முக்கிய அம்சங்கள் ஊடாகப் புரிந்துகொள்ள முடியும்:

2019-ஆம் ஆண்டு நயினாதீவு, நெடுந்தீவு மற்றும் அனலைதீவுகளில் சூரிய மற்றும் காற்றாலை மின்சாரத் திட்டத்தை முன்னெடுக்கச் சீன நிறுவனம் ஒப்பந்தம் கோரியது. ஆனால், தமிழகக் கடற்கரைக்கு மிக அருகில் சீன நிறுவனத்தின் நடமாட்டம் இருப்பது இந்தியா தனது பாதுகாப்புக்கு விடுக்கப்பட்ட சவாலாகக் கருதியது.

புதுடில்லியின் கடும் எதிர்ப்பைத் தொடர்ந்து அந்தத் திட்டம் இடைநிறுத்தப்பட்டு, தற்போது இந்தியாவின் முழுமையான மானிய நிதியுதவியுடன் அத்திட்டம் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. இதுவே சீனத் தூதுவர் நேர்காணலில் குறிப்பிட்ட மிக முக்கியமான "வெளி அழுத்தம்" ஆகும்.

யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் பகுதிகளில் சீன ஆதரவுடன் பாரிய கடல் அட்டை பண்ணைகள் உருவாக்கப்பட்டுள்ளன. உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குவதாகச் சீனா கூறினாலும், இந்தப் பண்ணைகளால் தங்களின் பாரம்பரிய மீன்பிடி நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுவதாக உள்ளூர் மீனவ சங்கங்கள் குற்றம் சாட்டுகின்றன. "ஆராய்ச்சி" மற்றும் "முதலீடு" என்ற பெயரில் கடற்பரப்பில் சீனர்களின் ஆதிக்கம் அதிகரிப்பது எதிர்காலத்தில் தங்களின் வாழ்வாதாரத்தைச் சிதைத்துவிடும் என்பதே மீனவர்களின் பெரும் அச்சமாக உள்ளது.

இலங்கையில் பொருளாதார நெருக்கடியின் போது, வடக்கு மீனவர்களுக்கு அரிசி, மீன்பிடி வலைகள் மற்றும் எரிபொருள் போன்றவற்றைச் சீனா தாராளமாக வழங்கியது. சீனத் தூதுவர் கி ஜென்ஹொங் நேரடியாகப் பலமுறை வடக்குக்கு பயணம் செய்து இந்த உதவிகளை வழங்கினார்.

இதனை வெறும் மனிதாபிமான உதவியாக மட்டும் பார்க்க முடியாது என அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இந்தியாவின் செல்வாக்கு மண்டலமான வடபுலத்தில், மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் தமிழர்களின் "ஆதரவைப் பெறுவதற்கான" ஒரு மென்-அதிகார தந்திரோபாயமாகவே இது பார்க்கப்படுகிறது.

"சீனத் தூதுவர் இதனை மக்களின் தேவையை முடக்கும் "வெளி அழுத்தம்" என்று வர்ணித்தாலும், வடக்கு - கிழக்கு தமிழ் அரசியல் தரப்புகள் இந்த இந்தியத் தலையீட்டை பெரும்பாலும் ஒரு பாதுகாப்பு கவசமாகவே பார்க்கின்றன. சீனாவின் வருகையைத் தமிழ் கட்சிகள் எதிர்ப்பதற்கு பிரதானமாக இரண்டு காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன.

முதலாவது, இலங்கையின் இனப்பிரச்னை மற்றும் போர்க்குற்ற விசாரணைகள் போன்ற விவகாரங்களில் இந்தியா மற்றும் மேற்குலக நாடுகள் கொடுத்து வரும் அழுத்தத்தை, சீனா தனது (மற்ற நாடுகளின்) "உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாமை" எனும் கொள்கை மூலம் நீர்த்துப்போகச் செய்துவிடும் என அவர்கள் அஞ்சுகின்றனர்.

இரண்டாவது, வரலாற்று ரீதியாகத் தமக்கு அரசியல் ஆதரவு வழங்கி வரும் இந்தியாவின் பாதுகாப்பு நலன்களுக்கு எதிராகச் சீனாவைத் தமது மண்ணில் அனுமதிப்பது, நீண்டகால ரீதியில் தமிழர்களின் அரசியல் பலத்தைக் குறைத்துவிடும் எனத் தமிழ் தலைவர்கள் கருதுகின்றனர். இதனால், "அபிவிருத்தி" என்பதைத் தாண்டி, சீனா இப்பிராந்தியத்தில் காலூன்றுவது ஒரு "அரசியல் மற்றும் பாதுகாப்பு அச்சுறுத்தலாகவே" பொதுச் சமூகத்தினாலும் தமிழ் தேசியக் கட்சிகளாலும் பார்க்கப்படுகின்றது."

"இலங்கையின் தற்போதைய அரசாங்கம், குறிப்பாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் தலைமையிலான நிர்வாகம், சீனாவுடன் பொருளாதார ரீதியாக மிகவும் நெருக்கமான உறவைப் பேணி வருகிறது. 2025 ஜனவரியில் ஜனாதிபதி சீனாவுக்கு மேற்கொண்ட உத்தியோகபூர்வ விஜயத்தின் போது, இரு நாடுகளுக்கும் இடையே 15 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

இதில் முக்கியமாக "பெல்ட் அண்ட் ரோட்" திட்டத்தின் கீழ் விவசாயம், டிஜிற்றல் பொருளாதாரம் மற்றும் கடல்சார் அபிவிருத்தி போன்ற துறைகளில் பாரிய முதலீடுகளை ஈர்க்க அரசாங்கம் இணங்கியுள்ளது. குறிப்பாக, அம்பாந்தோட்டையில் அமையவுள்ள 3.7 பில்லியன் டாலர் மதிப்பிலான சீன "சினோபெக்" எண்ணெய் சுத்திகரிப்பு நிலைய திட்டம், தற்போதைய அரசாங்கம் சீனாவின் முதலீடுகளை எவ்வளவு தூரம் வரவேற்கிறது என்பதற்கு ஒரு பலமான சான்றாகும்.

"இலங்கையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர், சீனாவுடனான உறவில் ஒரு புதிய கட்டம் ஆரம்பமாகியுள்ளது. கடந்த காலங்களைப் போல இலங்கையை "கடன்பொறிக்குள்" தள்ளும் பாரிய உள்கட்டமைப்புக் கடன்களைப் பெறுவதைத் தவிர்த்து, நேரடி வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதிலேயே புதிய நிர்வாகம் கவனம் செலுத்தி வருவதாக அரசாங்கம் கூறுகின்றது.

இதன் முதற்கட்டமாக, அம்பாந்தோட்டையில் சுமார் 3.7 பில்லியன் அமெரிக்க டாலர் முதலீட்டில் அதி நவீன எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை ஒன்றை அமைக்கும் பணிகளைச் சீனாவின் "சினோபெக்" நிறுவனத்துடன் இணைந்து அரசாங்கம் விரைவுப்படுத்தியுள்ளதாகவும், மேலும், விவசாய நவீனமயமாக்கல், டிஜிற்றல் தொழில்நுட்ப பரிமாற்றம் மற்றும் கடல்சார் ஒத்துழைப்பு உள்ளிட்ட துறைகளில் பல புதிய இருதரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் தற்போதைய அரசாங்கத்தின் கீழ் கையெழுத்தாகியுள்ளதாகவும் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

"இருப்பினும், தென்னிலங்கையில் சீன முதலீடுகளை வரவேற்கும் புதிய அரசாங்கம், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரை முற்றிலும் மாறுபட்ட ஒரு "மௌனமான தந்திரோபாயத்தையே" கையாண்டு வருகிறது. தற்போதைய அரசாங்கம் பொறுப்பேற்ற பின்னர், வடக்கு-கிழக்கு பிராந்தியத்தில் புதிய பாரிய முதலீட்டுத் திட்டங்கள் எதற்கும் சீனாவுக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

தமிழகக் கடற்கரையிலிருந்து மிக அருகில் இருக்கும் யாழ்ப்பாணம், மன்னார் அல்லது திருகோணமலை ஆகிய பகுதிகளில் சீனாவின் மூலோபாய அல்லது உள்கட்டமைப்பு ரீதியான பிரசன்னம் ஏற்படுவதை இந்தியா தனது தேசியப் பாதுகாப்புக்கு விடுக்கப்படும் நேரடி அச்சுறுத்தலாகவே பார்க்கிறது. புதிய அரசாங்கம் இந்தியாவின் இந்த அதிருப்தியைச் சம்பாதிக்கத் தயாராக இல்லை.

சீனத் தூதுவரின் ஆதங்கமான நேர்காணல் உணர்த்துவது ஒன்றையே, அபிவிருத்தித் திட்டங்கள் எத்தகைய கவர்ச்சிகரமானவையாக இருந்தாலும், இலங்கையின் வடக்கு-கிழக்கு மண்ணைப் பொறுத்தவரை, அது இந்தியாவின் பாதுகாப்புத் தராசிலும் தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளிலும் இணக்கம் காணாத வரை, சீனாவின் கனவுகளை செயல்படுத்துவதில் சிக்கல்கள் நீடிக்கலாம்." என்றார்.

(நன்றி-பிபிசி தமிழ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**மேடம்**
குடும்பத்தில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும்.

**இடபம்**
தடைகளை கண்டு தளரமாட்டீர்கள். தாய்வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். புது வேலை கிடைக்கும். பயணங்களால் அலைச்சல் உண்டு. வாகன வசதிப் பெருகும்.

**மிதுனம்**
குடும்பத்தில் ஆதரவு பெருகும். குடும்பத்தின் பூர்வீக சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். வாக னத்தை சீர் செய்வீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**கடகம்**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். அழகும் இளமையும் கூடும். நண்பர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். ஆடை ஆபரணம் சேரும்.மகிழ்ச்சியான நாள்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கடந்த காலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் சரியாக பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்றெல்லாம் வருந்துவீர்கள்.

**கன்னி**
கணவன் - மனைவிக்குள் அனுசரித்து போவது நல்லது. யாரையும் யாருக்கும் பரிந்துரை செய்ய வேண்டாம். வாகனத்தில் செல்லும் போது கவனம் தேவை. பொறுமை தேவைப்படும் நாள்.

**துலாம்**
திட்டமிட்ட காரியங்கள் கைக்கூடும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். சேமிக்க வேண்டுமென்ற எண்ணம் வரும். கடன் பிரச்சனை கட்டுப்பாட்டிற்குள் வரும்.

**விருட்சிகம்**
சொன்ன சொல்லைகாப்பாற்ற துடிப்புடன் செயல்படுவீர்கள். உறவினர், நண்பர்களுடன் மனம் விட்டு பேசுங்கள். காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும்.

**தனுசு**
உங்கள் பிடிவாதப் போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். உதவி செய்வார்கள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வு மனப்பான்மை வந்து செல்லும். தன்னம்பிக்கை குறையும். உறவினர், தடைகள் ஏற்படும் நாள்.

**கும்பம்**
பிள்ளைகள் உங்கள்அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள். மனைவி வழி உறவினர்கள் மதிப்பார்கள். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள்.

**மீனம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள், நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சிலமுடிவுகள் எடுப்பார்கள். அரசால்அனுகூலம் உண்டு. தொட்டது துலங்கும் நாள்.

# 'பத்திரிகைத்துறையில் என் கதை' தனபாலசிங்கத்தின் நூல் அறிமுகம்!

வடமராட்சி, ஏப். 25

வீரகத்தி தனபாலசிங்கத்தின் 'பத்திரிகைத்துறையில் என் கதை' நூல் அறிமுக நிகழ்வு கரவை மாணிக்கவாசகர் வித்தியாலய பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, மாலை 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகபேராசிரியர் கு. மிகுந்தன்கலந்த கொள்ளவுள்ளார்.

வரவேற்புரையை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி உப அதிபர் ந. பிரதீபன் நிகழ்த்தவுள்ளார்.

நூல் அறிமுகவுரையை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் வேல் நந்தகுமார் நிகழ்த்தவுள்ளார்.


கருத்துரைகளை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வைத்தியநிபுணர் சி. சிவதாஸ், கரவெட்டி திரு இருதயக் கல்லூரி ஓய்வுபெற்ற அதிபர் இ. இராகவன், பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி ஓய்வுபெற்ற அதிபர் ந. தெய்வேந்திரராஜா, சமுர்த்தி முகாமையாளர் ச. இராகவன் ஆகியோர் வழங்கவுள்ளனர். (அ-02)

# வவுனியாவில் போர் வெற்றி நிகழ்வு

வவுனியா, மே. 25

வவுனியாவில் சிங்கள மக்களால் போர் வெற்றிநாள் நிகழ்வுகள் நேற்று நினைவுகூரப்பட்டது. இதன்போது பழைய பஸ் நிலையப்பகுதியில் அமைந்துள்ள இராணுவ சிலை முன்பாக இந்நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதன்போது இராணுவ வீரர்களை நினைவுகூரும் வகையில் மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்வில் பௌத்த மதகுருமார்கள் மற்றும் சிங்கள மக்கள் பலர் கலந்து கொண்டனர். (அ)




## பொலிகண்டியில் சாதனையாளர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், மே. 25

வடமராட்சி பொலிகண்டி பாரதி சன சமூக நிலையத்தின் கல்வி சாதனையாளர் கௌரவிப்பு விழா நேற்று முன் தினம் பொலிகண்டி வீரபத்திரர் ஆலய பின்வீதியிலுள்ள பாரதி சன சமூக மண்டபத்தில் நடைபெற்றது.

நிலையத் தலைவர் தி.ரஜ்ஜித் தலைமையில் ஆலயத்திலிருந்து விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டு மங்கல விளக்கேற்றத்துடன் நிகழ்வு ஆரம்பமானது. நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன், சிறப்பு விருந்தினராக வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ந.திருலிங்கநாதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு கல்விச் சாதனையாளர்களை பாராட்டி கௌர வித்தனர்.

பிரதேச செயலர் ந. திருலிங்கநாதன் உள்ளிட்டோர் கலந்துகொண்டு சாதனையாளர்களை பாராட்டினர்.

மேலும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கிராம மக்கள் பலர் நிகழுவில் கலந்து கொண்டனர்.

## திருநாவற்குளத்தில் தொடரும் மின் தடை!

வவுனியா, மே. 25

வவுனியா திருநாவற்குளத்தில் தொடர்ந்து ஒவ்வொரு நாட்களும் பல தடவை மின்தடங்கல் ஏற்படுவதாக கிராம மக்கள் தெரிவித்தனர்.

குறிப்பாக காலை வேளைகளில் தினமும் மின்சாரம் தடைப்படுவதனால், பாடசாலை மாணவர்கள் மற்றும் அரச, தனியார் உத்தியோகத்தர்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர்.

குறிப்பாக ஒரு நாளில் ஐந்துக்கும் மேற்பட்ட மின் தடங்கல்கள் ஏற்படுகின்றன. இவ்வாறான தொடர் தடங்கல்கள் காரணமாக பல இலத்திரனியல் உபகரணங்கள் பழுதடைந்து போகின்றன.

இது தொடர்பாக மின்சார சபையின் பாவனையாளர் சேவைக்கு பல தடவை அறிவிக்கப்பட்ட போதும் இதற்கான தீர்வு இதுவரை வழங்கப்படவில்லை என்றும் மக்கள் தெரிவித்தனர். (அ)

## கடலில் தத்தளித்த இந்திய மீனவர் மீட்பு

யாழ்ப்பாணம், மே. 25

தற்போது நிலவும் கடும் காற்றுக் காரணமாக திசைமாறி வந்து யாழ். நெடுந்தீவுக் கடற்பரப்பில் தத்தளித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர் ஒருவர் நெடுந்தீவு கடற்றொழிலாளர்களால் மீட்கப்பட்டு பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

தமிழகம் இராமேஸ்வரம் இராமநாதபுரம் பகுதியைச் சேர்ந்த 56 வயதுடைய ஒருவரே இவ்வாறு இலங்கை கடற்பரப்பில் மீட்கப்பட்டு நெடுந்தீவு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். இதே நேரம் நேற்று முன் தினம் மாலை 4.30 மணியளவில் குறித்த மீனவர் நெடுந்தீவு மீனவர்களால் மீட்கப்பட்ட நிலையில் தம்மிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளதாகவும், விசாரணைகளின் பின்னர் குறித்த தமிழக மீனவரை ஊர்காவற்றுறை நீதிமன்றில் முன்னிலைப் படுத்தவுள்ளதாகவும் நெடுந்தீவு பொலிசார் தெரிவித்தனர். (அ)

# சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

மன்னார், மே. 2

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபையும் இணைந்து வழங்கும் திருமுறை சேர்ந்திசை விண்ணப்ப நிகழ்வும்,

மேற்படிச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் மன்னார் திருக்கேதீச்சரம் அன்னபூரணி கலாசார மண்ட பத்தில் எதிர்வரும் 31 ஆம் ஞாயிற்றுக் கிழமை இடம் பெறவுள்ளது.

காலை 8.00 மணிக்கு திருமுறை சேர்ந்திசை விண்ணப்ப நிகழ்வும், மாலை 2.30 மணிக்கு சான்றிதழ் வங்கும் நிகழ்வும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய. அனிருத்தனன் அவர்கள் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இதில் பிரதம அதிதியாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குணராஜா அவர்களும்

சிறப்பு அதிதிகளாக முல்லைத்தீவு மாவட்ட அதிபர் செயலக அரசாங்க அதிபர் அ. உமாமகேஸ்வரன் மற்றும் மன்னார் மாவட்ட செயலக அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரன் ஆகியோரும் கலந்துன்கொள்ளவுள்ள

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட இணைய வழிமூலமான பண்ணிசைப் பயிற்சி நெறியினை நிறைவு செய்த 4 ஆம் அணி மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இடம் பெறவுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பொருளாதார நெருக்கடி இலங்கையில் இல்லை!

## பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ

கொழும்பு, மே. 25

இலங்கையில் தற்போது உள்நாட்டு ரீதியில் எவ்வித பொருளாதார நெருக்கடியும் இல்லை எனவும், அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு முந்நூற்று முப்பது ரூபாய் அளவில் ஸ்திரமடைந்துள்ளதாகவும் நிதித் திட்டமிடல் பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், நாடு மீண்டும் ஒரு பொருளாதார வீழ்ச்சியை நோக்கிச் செல்வதாக வெளியாகியுள்ள செய்திகளை முற்றாக நிராகரித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டில் ஏற்பட்ட நிலையும் தற்போதைய சூழ்நிலையும் முற்றிலும் வேறுபட்டவை எனச் சுட்டிக்காட்டியுள்ள அவர், 2025ஆம் ஆண்டு பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் முன்னேற்றத்தின் அடிப்படையில் வரலாற்றில் மிகச் சிறந்த ஆண்டாகப் பதிவாகியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய கிழக்கு மோதல்கள் காரணமாக உலக சந்தையில் எரிபொருள் மற்றும் கப்பல் போக்குவரத்துச் செலவுகள் அதிகரித்தமையே அண்மைக் காலமாக நாணய மாற்று விகிதத்தில் தற்காலிக ஏற்ற இறக்கங்களை ஏற்படுத்தியதாக அவர் விளக்கியுள்ளார்.

அத்துடன், வாகன இறக்குமதி மூலம் நாட்டின் வெளிநாட்டு கையிருப்பு பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் வதந்திகளை மறுத்துள்ள பிரதி அமைச்சர், கடந்த பதினைந்தாம் திகதி ஆயிரத்து எழுநூற்று எண்பத்திரண்டு வாகனங்கள் மட்டுமே இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.



மேலும், வரும் நாள்களில் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து எழுநூறு மில்லியன் டொலர்களும், ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 480 மில்லியன் டொலர்களும், உலக வங்கியிடமிருந்து 150 மில்லியன் டொலர்களும் என மொத்தம் 1.3 பில்லியன் டொலர்களுக்கும் அதிகமான சர்வதேச நிதி உதவிகள் இலங்கைக்குக் கிடைக்கவுள்ளதாகப் பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ மேலும் தெரிவித்துள்ளார்.

(அ)

# அஸ்வெசும சரிபார்க்கும் பணி ஜூன் இறுதியில் நிறைவடையும்

கொழும்பு, மே. 25

"இலங்கையில் அஸ்வெசும நலன்புரித் திட்டத்தின் கீழ் மறுசான்றளிப்பிற்காக விண்ணப்பித்துள்ள சுமார் முப்பது இலட்சம் பேரின் விவரங்களை மீள்சரிபார்க்கும் பணிகள் எதிர்வரும் ஜூன் மாத இறுதிக்குள் நிறைவு செய்யப்படும் என கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் கலாநிதி உபாலி பன்னிலகே தெரிவித்துள்ளார்.

தற்பொழுது நாடு தழுவிய ரீதியில் கிராம உத்தியோகத்தர்கள் ஊடாக வீடுகளுக்குச் சென்று விபரங்களைச் சரிபார்க்கும் முதற்கட்டப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், ஜூன் மாதத்திற்குப் பின்னர் மேன்முறையீடுகளை ஆராய்வதற்காக மேலும் மூன்று மாதங்கள் வரை எடுத்துக்கொள்ளப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் பின்னரே இறுதிப் பட்டியல் பாராளுமன்ற ஒப்புதலுக்காகச் சமர்ப்பிக்கப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, உலக சந்தையில் எரிபொருள் விலை உயர்வால் உள்நாட்டில் ஏற்பட்டுள்ள விலைவாசி அதிகரிப்பு மற்றும் ரூபாய் மதிப்பு வீழ்ச்சி போன்ற சவால்களுக்கு மத்தியில்,

ஏழை எளிய மக்களைப் பாதுகாப்பதற்காக அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுகளை அதிகரிப்பது குறித்து அரசாங்கம் பரிசீலித்து வருவதாகப் பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

தற்போதைய பொருளாதாரச் சூழல் குறித்து விளக்கமளித்த அவர், கடந்த காலங்களைப் போலன்றி தற்பொழுது இலங்கை வசம் ஏழு பில்லியன் அமெரிக்க டொலர் தேசிய கையிருப்பு உள்ளதால் நாடு மீண்டும் ஒரு பொருளாதார வீழ்ச்சியை நோக்கிச் செல்லாது என உறுதியளித்துள்ளார்.

அத்துடன், நிலைமை உன்னிப்பாகக் கண்காணிக்கப்பட்டு வருவதாகவும், தேவை ஏற்படும் பட்சத்தில் நலன்புரி கொடுப்பனவுகளுக்கான நிதி ஒதுக்கீடுகளை அதிகரிக்க அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(அ)

# வெளிநாட்டில் உள்ள குற்றக்குழு நபர்கள் 226 பேருக்கு சர்வதேச சிவப்பு அறிவித்தல்!

கொழும்பு, மே. 25

வெளிநாடுகளில் பதுங்கியிருக்கும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக்குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய 226 பேரை கைது செய்வதற்கு சர்வதேச சிவப்பு அறிவித்தல்கள் விடுக்கப்பட்டுள்ளது. என கொழும்பு மாவட்டத்திற்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் நிஷாந்த த சொய்சா தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாள்களாக நாட்டில் கைது செய்யப்பட்ட ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகள் தொடர்பான விவரங்களை அறிவிக்கும் வகையில் அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் சிவப்பு அறிவித்தல் மூலம் 35 சந்தேகநபர்கள் உட்பட பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடைய சுமார் 130 இற்கும் மேற்பட்ட சந்தே கநபர்கள் இதுவரை இலங்கைக்கு அழைத்து வரப்பட் டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் தற்போது சர்வதேச பொலிஸாரின் உதவியுடன் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள 226 சிவப்பு அறிவித்தல்களில் சுமார் 90 பேர் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேகநபர்கள் அனைவரையும் விரைவில் இலங்கைக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் கொழும்பு மாவட்டத்திற்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் நிஷாந்த சொய்சா தெரிவித்துள்ளார்.

# பலத்த காற்றினால் பாரிய மரம் வீழ்ந்ததால் போக்குவரத்து தடை



திருமலை, மே. 25

திருமலை தம்பலகாமம் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் திடீரென வீசிய பலத்த காற்றின் காரணமாக முள்ளிப்பொத்தானை- கிண்ணியா வீதியில் முள்ளிப்பொத்தானை சிங்கள கனிஷ்ட வித்தியாலயத்திற்கு முன்பு பாரிய மரமொன்று வீதியின் நடுவில் முறிந்து விழுந்தது. இதனால் குறித்த வீதி ஊடான போக்கு வரத்து சில மணி நேரம் தடைப்பட்டது.

இதனை தம்பலகாமம் பிரதேச சபை தவிசாளர் எச்.தாலிப் அலி, உறுப்பினர், ஊழியர்கள் முன்னின்று மற்றும் தம்பலகாமம் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் மரத்தை வெட்டி அகற்றப்பட்டது.


உயிர்ச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கடந்த கால ஆட்சியாளர்களால் நாடு பெரும் சீரழிவு நிலையில்!

## ஆதம்பாவா எம்.பி. குற்றச்சாட்டு




அம்பாறை, மே. 25

கடந்த கால ஆட்சியாளர்கள் தொன் கணக்கில் போதைப் பொருட்களை நாட்டிற்குள் இறக்குமதி செய்து விநியோகித்ததன் காரணமாக நாடு பாரிய சமூக மற்றும் பொருளாதார சீரழிவை எதிர்கொண்டுள்ளதாக அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேச அபிவிருத்திக் குழுத் தலைவரும், இலங்கை அரசியலமைப்பு பேரவை உறுப்பினரும், பாராளுமன்ற உறுப்பினருமான அபூபக்கர் ஆதம்பாவா தெரிவித்தார்.

தேசிய இளைஞர் தினத்தை முன்னிட்டு இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் ஏற்பாட்டிலும், தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் நெறிப்படுத்தலிலும் அம்பாறை மாவட்டத்திற்கான விசேட போதை ஒழிப்பு பேரணி கல்முனையில் நடைபெற்றது.

"போதைப்பொருளுக்கு எதிராய் எம் தேசத்திற்காய்" என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற இப்பேரணி, சாய்ந்தமருது எல்லைக்கு முன்பாக காலை 9.30 மணியளவில் ஆரம்பமானது.

பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றிய அபூபக்கர் ஆதம்பாவா, இளைஞர் சமூகத்தை இலக்காகக் கொண்டு திட்டமிட்ட வகையில் போதைப்பொருள் வலையமைப்புகள் செயல்பட்டதாகவும், அதனை கட்டுப்படுத்துவதில் கடந்த ஆட்சியாளர்கள் தோல்வியடைந்ததாகவும் குறிப்பிட்டார்.

தற்போதைய அரசாங்கம் நாட்டையும் எதிர்கால தலைமுறையையும் பாதுகாக்கும் நோக்கில் போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பாக பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்களை மையப்படுத்தி விழிப்புணர்வு நடவடிக்கைகள், சட்ட அமுலாக்க நடவடிக்கைகள் மற்றும் சமூக ஒத்துழைப்புடன் கூடிய தேசிய மட்ட திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

(அ)

சிறுமி குறித்து சர்ச்சைக்குரிய கருத்து:

# திலும் அமுனுகமவை வாக்குமூலம் பதிவு செய்ய அழைத்தது பொலிஸ்

கொழும்பு, மே. 25

அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் சர்ச்சைக்குரிய கருத்துக்களை வெளியிட்டமை தொடர்பில், முன்னாள் அமைச்சரும் "சர்வஜன பலய" தேசிய அமைப்பாளருமான திலும் அமுனுகமவிடம் வாக்குமூலம் ஒன்றைப் பதிவு செய்வதற்காக அவர் பொலிஸ/க்கு அழைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எப். யூ. வூட்லர் தெரிவித்துள்ளார்.

தற்போது நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள 15 வயதுச் சிறுமி ஒருவருடன் தொடர்புடைய சிறுவர் துஷ்பிரயோக வழக்கொன்றில், அட்டமஸ் தானாதிபதி தேரர் கைது செய்யப்பட்டமை "ஒரு பாலியல் தொழிலாளி" வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையிலேயே என திலும் அமுனுகம குறிப்பிட்டிருந்தார்.

பாதிக்கப்பட்ட சிறுமி குறித்து இவ்வாறான சொற்பிரயோகத்தைப் பயன்படுத்தியமைக்கு எதிராக சமூக ஊடகங்களில் கடுமையான கண்டனங்கள் எழுந்ததைத் தொடர்ந்து, தனது கருத்துக்கள் தவறாகச் சித்தரிக்கப்பட்டுள்ளதாகவும், நிட்டம்புவ பகுதியில் நடந்த வேறொரு சம்பவம் குறித்த தகவலையே தான் குறிப்பிட்டதாகவும் திலும் அமுனுகம விளக்கமளித்துள்ளார்.

அத்துடன், இந்தத் தவறான புரிதலினால் அந்தச் சிறுமிக்கோ, அவரது குடும்பத்தினருக்கோ அல்லது சமூகத்தில் யாருக்கேனும் மனவருத்தம் ஏற்பட்டிருந்தால், அதற்காகத் தான் மன்னிப்புக் கோருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்த வழக்கில் பாதிக்கப்பட்டவராகவும் முக்கிய சாட்சியாகவும் விளங்கும் சிறுமிக்கு இந்த கருத்துக்கள் பெரும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடும் என்பதால், இது குறித்து உடனடியாக விசாரிக்குமாறு மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு பொலிஸ் மா அதிபரிடம் உத்தியோக பூர்வமாகக் கோரிக்கை விடுத்துள்ளது.

திலும் அமுனுகமவின் இந்தக் கூற்றானது, 2023 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க குற்றங்களினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளைப் பாதுகாத்தல் சட்டத்தின்கீழ் குற்றமாக கருதப்படலாம் என அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

(அ)

# சிவாஜிலிங்கத்தை சந்தித்த தேசிய மக்கள் சக்தியினர்!



யாழ்ப்பாணம், மே. 25

உடல் நலம் பாதிக்கப்பட்டுள்ள வல்வெட்டுத்துறை நகரசபை தவிசாளர் எம்.கே. சிவாஜிலிங்கத்தை தேசிய மக்கள் சக்தியின் நேரில் சென்று நலம் விசாரித்துள்ளனர்.

சிறுநீரகம் பாதிக்கப்பட்டு உடல் நலம் பாதிக்கப்பட்டுள்ள எம்.கே.சிவாஜிலிங்கத்தின் இல்லத்திற்கு கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் , தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன் மற்றும் ஜெ.ரஜீவன் ஆகியோர் நேரில் சென்று சுகம் விசாரித்து ஆறுதல் கூறினர்.

தனது இரு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் , சிகிச்சைக்காக சுமார் 70 இலட்ச ரூபாய் தேவைப்படுவதாகவும் ,அதற்கு உதவவேண்டும் எனவும் சிவாஜிலிங்கம் பகிரங்கமாக கோரி இருந்தார். அதனை அடுத்து உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் வசிக்கும் பெருமளவானோர் நிதியுதவிகளை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (அ)

# கனகர் கிராமத்தில் பொதுக்கிணறு மக்கள் பாவனைக்குக் கையளிப்பு

அம்பாறை, மே. 25

பொத்துவில் மீள்குடியேற்ற கிராமமான கனகர் கிராமத்தில், அங்கு வாழும் மக்களின் மிக அத்தியாவசியத் தேவைகளில் ஒன்றான குடிநீர் கிணறு ஒன்று உத்தியோகபூர்வமாக மக்களின் பாவனைக்காகக் கையளிக்கப்பட்டுள்ளது.

'வெஸ்டன் தமிழர் சங்கம் கனடா' அமைப்பின் நிதி ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்ட இக் கிணறு, நேற்று முன்தினம் சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

பொத்துவில் கனகர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் எஸ். செல்வகுமாரின் தலைமையில் நடைபெற்ற இந்நிழ்வில், கனகர் கிராமத்துக்குப் பொறுப்பான கிராம சேவை உத்தியோகத்தர் ரி. ராஜேந்திரன், அபிவிருத்தி உத்தியோகத்தர் காண்டீபன் மற்றும் உதவும் பொற்கரங்கள் அமைப்பின் தாயக இணைப்பாளர் என் சௌவியதாசன் மற்றும் கிராமப் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண் டனர்.

'உதவும் பொற்கரங்கள்' அமைப்பின் பணிப்பாளர் விசு கணபதிப்பிள்ளையின் வேண்டுகோளுக்கு இணங்க, வெஸ்டன் தமிழர் சங்கம் கனடா அமைப்பினால் இந்த நிதியுதவி வழங்கப்பட்டு இக்குடிநீர் கிணறு அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.



இக்கிராமத்தில் சுமார் 73 குடும்பங்கள் வாழ்ந்து வரும் நிலையில், இதுவரை இரண்டு பொதுக்கிணறுகள் மாத்திரமே பாவனையில் இருந்துள்ளன.

இதனால் அப்பகுதி மக்கள் குடிநீருக்காகவும், தமது வாழ்வாதாரத் தோட்டப் பயிர்ச்செய்கைகளுக்கான நீரைப் பெற்றுக்கொள்வதிலும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர்.

தமது நீண்டநாள் தேவையறிந்து இப் பொதுக்கிணற்றைப் பெற்றுத் தந்தமைக்காக, வெஸ்டன் தமிழர் சங்கம் கனடா அமைப்பின் தலைவர் கல்யாணசுந்தரம் மற்றும் அதன் உறுப்பினர்களுக்குக் கிராம மக்கள் தமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துள்ளனர். அத்துடன், இவ்வாறான பொதுக் கிணறுகளைத் தேவைகளுள்ள ஏனைய பகுதிகளிலும் தொடர்ந்து அமைத்துத் தருமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# பாணமை சந்தியில் உகந்தைக்கான திசை நிர்ணய வீதி அறிவித்தல் பலகை இல்லை!

காரைதீவு, மே. 25

அம்பாறை மாவட்டத்தின் பாணமை சந்தியில் இருந்து , காட்டிற்குள் இருக்கும் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற உகந்தமலை முருகன் ஆலயம் நோக்கிச் செல்லும் பிரதான வீதிக்கான திசை நிர்ணய வீதி அறிவித்தல் பலகை இதுவரை பாணமைச் சந்தியில் நிறுவப்படவில்லை என பக்தர்களும் பொதுமக்களும் கவலை வெளியிட்டுள்ளனர்.

பாணமை சந்தியிலிருந்து உகந்தமலை ஆலயத்திற்குச் செல்லும் பாதை பல்லாயிரக் கணக்கான பக்தர்களால் பயன்ப டுத்தப்பட்டு வருகின்றது.

(அ)

# மணல் கடத்தலில் ஈடுபட்ட 4 பேர் கைது!

கிளிநொச்சி, மே. 25

கிளிநொச்சி - பரந்தன் பகுதியில் அனுமதி பத்திரங் கள் இன்றி சட்டவிரோத மாக மணல் கடத்தலில் ஈடுபட்ட தாக கூறப்படும் சந்தேகத்தில் நான்கு பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தருமபுரம் பகுதியில் இருந்து அனுமதி பத்திரங்கள் இன்றி யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த நான்கு டிப்பர் வாகனங்களை பரந் தன் பகுதியில் சோதனை செய்த மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸார் கைது செய்தனர்.பிரதேசவாசிகள் வழங்கிய முறைப்பாட்டின் அடிப் படை யில் மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸார் நடவடிக்கை எடுத் துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## எரிபொருள்களுக்கான...

இந்த மானியங்களுக்காக அரசாங்கம் மாதத்திற்கு 15 முதல் 20 பில்லியன் ரூபாய் வரை செலவிடுகிறது என்றும், இது ஆண்டுக்கு 200 முதல் 250 பில்லியன் ரூபாய் வரை உயரக்கூடும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

விலைகளைக் குறைவாக வைத்திருப்பது எரிபொருளுக்கான தேவையைக் குறைக்காது என்றும், அது டொலருக்கான தேவையைக் கட்டுப்படுத்துவதைத் தடுக்கும் என்றும் தனநாத் பெர்னாண்டோ கூறுகிறார்.

எரிபொருள் நுகர்வைக் குறைக்காமல் டொலர் நெருக்கடிக்குத் தீர்வு காண்பது கடினம் என்பதால், எரிபொருளுக்கான இதுபோன்ற நலத்திட்ட மானியங்கள் வழங்கப்படக்கூடாது என்றும் அவர் தொடர்ந்தும் வலியுறுத்தியுள்ளார். (அ)

## எரிபொருள்களின் விலை...

கிடைக்கும் என்று ஜூலி கொசாக் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

செலவின மீட்பு விலை சீர்திருத்தங்கள் மற்றும் நலிவடைந்த சமூகங்களைப் பாதுகாப்பதற்கான வழிமுறைகள் ஆகிய இரண்டையும் வழங்குவதையே இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது என்று அவர் மீண்டும் வலியுறுத்தினார்.

மேலும், இலங்கை சமீபத்தில் சந்தித்த புயலும், மத்திய கிழக்கில் நிலவும் மோதல்களின் வெளிப்புறத் தாக்கமும் நாட்டின் பொருளாதாரம் மற்றும் மக்கள் மீது கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தால் செயல்படுத்தப்பட்ட எரிபொருள் மானியத் திட்டம், குறிப்பாக ஒரு லீட்டர் டீசலுக்கு 100 ரூபாய் மானியம் வழங்குவது, சர்வதேச நாணய நிதியத்தின் விலை நிர்ணயக் கட்டமைப்புடன் முரண்படுவதாக இதன்போது செய்தியாளர்கள் சுட்டிக்காட்டியபோதும் அதற்கான நேரடிப் பதில் வழங்குவதில் இருந்து ஜூலி கொசெக் பிடிகொடுக்காமல் நழுவியுள்ளார்.

எனினும் சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்பாடுகளை நிறைவேற்றுவது இலங்கை அரசாங்கத்தின் கடமைப்பாடுகளில் ஒன்றாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டிள்ளார்.

அதன் பிரகாரம் எரிபொருள்களுக்கான விலை மீண்டும் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)

## அமெரிக்க டொலரின்...

ரூபாய்க்கு நிகரான அமெரிக்க டொலரின் மதிப்பு வீழ்ச்சியடையும் என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

பொது நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், அண்மைக் காலமாக நிலவி வந்த நாணய மாற்று விகித ஏற்ற இறக்கங்களைச் சுட்டிக்காட்டி எதிர்க்கட்சியினர் முன்வைத்த விமர்சனங்களை முற்றாக நிராகரித்துள்ளார்.

டொலரின் மதிப்பு முன்னதாக முந்நூற்று நாற்பது ரூபாயைக் கடந்தபோது சில எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் அதனைத் தங்களின் வெற்றியாகக் கொண்டாடியதாகக் குறிப்பிட்ட அமைச்சர், தற்பொழுது டொலரின் மதிப்பு மீண்டும் வீழ்ச்சியடைந்து முந்நூற்று முப்பத்து நான்கு ரூபாய் வரை குறைந்துள்ளதாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், வரும் வாரங்களில் டொலரின் மதிப்பு இன்னும் பெருமளவில் வீழ்ச்சியடையும் என அரசாங்கம் எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து சுமார் 700 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவி இலங்கைக்குக் கிடைக்கவுள்ளதாகவும், அந்த நிதி கிடைத்தவுடன் நாட்டின் வெளிநாட்டு கையிருப்பு நிலைமை மேலும் பலமடங்கு வலுவடையும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நாட்டில் நிலவும் நாணய நிலவரம் குறித்து தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்த எதிர்க்கட்சியினர் முயற்சிப்பதாகக் குற்றம் சாட்டிய அமைச்சர் பிமல் ரத்நாயக்க, தற்போதைய அரசாங்கத்தின் பொருளாதார வேலைத்திட்டங்கள் எவ்வித தடைகளுமின்றி வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக உறுதியளித்துள்ளார். (அ)

## அரசாங்கத்தின்...

நந்தலால் வீரசிங்க வலியுறுத்தியுள்ளார்.

ரூபாயின் மதிப்பு வீழ்ச்சி வெளிநாட்டுக் கடன் அதிகரிப்பதற்குக் காரணம் அல்ல எனவும், வெளிநாட்டுக் கடன் ஒரு டொலர் கூட அதிகரிக்காது எனவும் மத்திய வங்கி ஆளுநர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் கடனை ரூபாயில் அல்லாமல் டொலரில் அளவிட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

உலகில் எந்த நாடும் தனது வெளிநாட்டுக் கடனைத் தனது சொந்த நாணயத்தில் அளவிடுவதில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அரசின் வருமானத்தின் பெரும்பகுதி பெறுமதிசேர் வரி மற்றும் இறக்குமதி வரிகளிலிருந்து வருகிறது.

ரூபாயின் மதிப்பு குறையும்போது, டொலர்கள் தொடர்பான வரிகள் மற்றும் இறக்குமதி வரிகள் மூலம் அரசின் ரூபாய் வருமானம் அதிகரிக்கிறது.

உலகில் எங்கும் "ஒரு நாடு தனது வெளிநாட்டுக் கடனைத் தனது சொந்த நாணயத்தில் அளவிடுவதில்லை. அரசாங்கக் கடன் ரூபாயில் அல்ல, டொலர்களில் அளவிடப்பட வேண்டும் என மத்திய வங்கியின் ஆளுனர் வலியுறுத்தியுள்ளார். (அ)

## மாகாண சபை...

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த ஆண்டு பாதீட்டில் மாகாண சபை தேர்தலுக்காகப் பணம் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால், "டித்வா" புயல் பாதிப்புகள் காரணமாக, அந்தப் பணத்திலிருந்து 500 பில்லியன் ரூபாயை (5,000 கோடி) நிவாரணப் பணிகளுக்காக ஒதுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

இதன் காரணமாக, திட்டமிட்டபடி இந்த ஆண்டில் தேர்தலை நடத்த முடியாமல் போனது.

அத்துடன், ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக்காலத்தில் மாகாண சபை தேர்தலை நடத்துவதற்காக இருந்த சட்ட நடைமுறைகளில் சில சிக்கல்கள் ஏற்பட்டன.

தற்போது இச்சிக்கல்களைத் தீர்ப்பதற்காக பாராளுமன்றக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் அறிக்கை கிடைத்தவுடன், அதனைப் பரிசீலித்து அடுத்த ஆண்டளவில் மாகாண சபை தேர்தலை நடத்த முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை மாகாண சபை தேர்தலை நடத்துவது தொடர்பாக இந்திய அரசிடமிருந்து எந்தவித அழுத்தங்களும் இல்லை. இந்திய அரசுக்கும், எமது அரசாங்கத்துக்கும் இடையில் மிகவும் இணக்கமான, நட்புறவான மற்றும் ஆரோக்கியமான புரிந்துணர்வு நிலவுகிறது- என்றார். (அ)

## அத்தியாவசியமற்ற...

கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை ரூபாயை நிலைப்படுத்தவும், தேவையற்ற செலவினங்களைக் கட்டுப்படுத்தவும் அரசாங்கம் பல மேலதிக நடவடிக்கைகளை எடுக்கவுள்ளது.

அதன்படி, அத்தியாவசியமற்ற இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தவும், 2022 பொருளாதார நெருக்கடியின் போது எடுக்கப்பட்ட சில நடவடிக்கைகளை மீண்டும் நடைமுறைப்படுத்தவும் அரசாங்கம் திட்டமிடுகிறது.

வாகன இறக்குமதிகளை மட்டுப்படுத்துவவதற்கும், ரூபாயின் மீதான அழுத்தத்தைக் குறைப்பதற்கும் கடந்த வாரம் விதிக்கப்பட்ட வாகன சுங்க வரிகள் மீதான 50 வீத கூடுதல் கட்டணத்தை மேலும் மூன்று மாதங்களுக்கு நீட்டிப்பதும் இந்த நடவடிக்கைகளில் அடங்கும்.

தற்போது வர்த்தக வாகனங்களுக்கு 70 வீதமாகவும், தனியார் வாகனங்களுக்கு 50 வீதமாகவும் உள்ள வாகனங்களுக்கான கடன்-மதிப்பு வரம்பை அதிகரிப்பது குறித்தும் அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.

கடந்த ஆண்டு பெப்ரவரி முதல் வாகன இறக்குமதிக்காக மட்டும் கிட்டத்தட்ட 2 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டுள்ளதாக அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

2022 பொருளாதார நெருக்கடியின் போது நடைமுறைப்படுத்தப்பட்டது போலவே, அந்நியச் செலாவணியைச் சேமிப்பதற்காக அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்துவது குறித்தும் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.

கடுமையான அந்நியச் செலாவணிப் பற்றாக்குறையின் காரணமாகஇ மத்திய வங்கி 2022 இல் 367 "அத்தியாவசியமற்ற" பொருள்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்தியது.

இவ்வாறு கட்டுப்படுத்தப்பட்ட பொருள்களில் வீட்டு உபயோக மின் சாதனங்கள், ஆடைகள், சுகாதாரப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், அத்துடன் தலைமுடி மற்றும் உடல் பராமரிப்புப் பொருட்கள் ஆகியவை அடங்கும்.

மேலதிகமாக புதிய பழங்கள், மீன், பால் பொருட்கள், தானியங்கள், மாவு, மினரல் மற்றும் கார்பனேற்றப்பட்ட நீர், பீர், சைன் மற்றும் மதுபானம் போன்ற பரந்த அளவிலான உணவு மற்றும் பானங்களுக்கும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இது தொடர்பாக சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் தெரியவந்துள்ளது.

ரூபாயின் மதிப்பு சரிவு மற்றும் எரிபொருள் விலை உயர்வு காரணமாக, இந்த ஆண்டு மே மாத நிலவரப்படி நாட்டின் சராசரி மாதாந்திர எரிபொருள் செலவு 100 மில்லியன் அமெரிக்க டொலரிலிருந்து 522 மில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது என்றும் அந்த அதிகாரி மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

2022-ஆம் ஆண்டைப் போலவே, ஏற்றுமதியாளர்கள் ரூபாயின் மதிப்பு மேலும் பலவீனமடையும் வரை காத்திருப்பதாகவும், தாங்கள் ஈட்டும் அந்நியச் செலாவணியை நாட்டிற்குள் கொண்டுவரவோ அல்லது அதனை ரூபாயாக மாற்றவோ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

## அகமதாபாத்...

வாரத்திற்கு மூன்று நாட்கள் தனது விமானச் சேவைகளை இயக்கவுள்ளது. இதன் மூலம், ஏனைய நகரங்கள் ஊடாக இதுவரை 9 மணித்தியாலங்களாகக் காணப்பட்ட பயண நேரம், இனி வெறும் 3 மணித்தியாலங்களாகக் குறையும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் சுற்றுலா சந்தையில் இந்தியா தொடர்ந்து முதலிடத்தில் இருந்து வருகிறது. இது குறித்து சினமன் ஹோட்டல்ஸ் அண்ட் ரிசார்ட்ஸ் அமைப்பின் பிரதிநிதி கமல் முனசிங்க ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில், கடந்த ஆண்டில் மாத்திரம் இந்தியாவில் இருந்து சுமார் 500,000 சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்துள்ளதாகவும், இந்த ஆண்டில் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் ஏனைய முக்கிய நகரங்களில் இருந்து நேரடி வான்வழித் தொடர்புகள் ஏற்கனவே காணப்பட்ட போதிலும், குஜராத் மாநிலத்தின் அகமதாபாத் நகரம் இதுவரை இலங்கை சுற்றுலாத்துறையால் முழுமையாகப் பயன்படுத்தப்படாத ஒரு பெரும் சந்தையாகக் காணப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

## ரூபாவின் மதிப்பு...

அன்று அமெரிக்க டொலருக்கு நிகராக 2.7 வீதத்தால் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளதாக "புளூம்பேர்க்" இணையத்தளம் தெரிவித்துள்ளது.

இது, 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குப் பின்னர் ரூபா பதிவு செய்த மிகப்பெரிய ஒருநாள் வளர்ச்சியாகும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, அன்றைய தினம் ஆசியாவிலேயே மிகச் சிறந்த முறையில் செயல்பட்ட நாணயமாக இலங்கை ரூபா மாறியுள்ளது.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றிடமிருந்து இலங்கைக்கு நிதி கிடைக்கவுள்ள நிலையில், சந்தையிலுள்ளவர்கள் தங்களிடமுள்ள டொலர்களை விற்பனை செய்ய முற்பட்டதே ரூபா வலுவடைவதற்குக் காரணம் என அரசாங்கம் தெரிவிப்பதாக அந்த இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, ரூபாவின் மதிப்பை ஸ்திரப்படுத்துவதற்காகத் தனிப்பட்ட வாகன இறக்குமதியின் மீது கூடுதல் கட்டணத்தை விதிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக "புளூம்பேர்க்" இணையத்தளம் சுட்டிக்காட்டியுள்ளது. அத்துடன், மத்திய வங்கியும் தேவையான சந்தர்ப்பங்களில் சந்தை நடவடிக்கைகளில் தலையிடும் எனத் தெரிவித்துள்ளதாக அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## நாளை முதல்...

நிலவும் என்றும், மே 26 முதல் 28 வரையிலான நாட்களில் மழைவீழ்ச்சி அதிகரிக்கக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்கள அதிகாரி கசுன் பெஸ்குவல் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, கடந்த நாட்களில் பெய்த பலத்த மழையினால் உயர்வடைந்திருந்த பிரதான ஆறுகளின் நீர்மட்டம் தற்போது குறைவடைந்து வழமைக்குத் திரும்பி வருகின்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

களனி கங்கையின் நீர்மட்டம் தற்போது வழமைக்குத் திரும்பியுள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் இன்றைய அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

எனினும், களு கங்கையின் மில்லகந்தை பகுதியில் சிறியளவிலான வெள்ள நிலைமை நீடிப்பதாகவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

அத்தனகலு ஓயாவின் நீர்மட்டம் குறைவடைந்து வந்தாலும், தூனுமலே சுற்றியுள்ள மக்கள் விழிப்புடன் இருக்குமாறு நீர்பாசனத் திணைக்களம் எச்சரித்துள்ளது. (அ)

## சீரற்ற காலநிலை...

வெள்ளம் காரணமாகவே பெருமளவானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

859 வீடுகள் பகுதியளவும், 2வீடுகள்முழுமையாகவும் சேதமடைந்துள்ளன.

இரத்தினபுரி மாவட்டத்தில் ஆயிரத்து 204 குடும்பங்களைச் சேர்ந்த4 ஆயிரத்து 558 பேரும், கொழும்பு மாவட்டத்தில் ஆயிரத்து571 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 773 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கம்ஹா மாவட்டத்தில் 3 ஆயிரத்து 950 குடும்பங்களைச் சேர்ந்த 15 ஆயிரத்து 313 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். (அ)

## செங்கோட்டையன்...

இணைந்து, அதன் வெற்றிக்காக முக்கிய பங்களிப்பு செய்திருந்தார்.

பின்னர் விஜய் தலைமையிலான ஆட்சியில் அவருக்கு வழங்கப்பட்ட நிதியமைச்சு பதவி மாற்றப்பட்டு, வருவாய் வரித்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# முடிந்தால் பஸில் ராஜபக்ஷவை நாட்டுக்கு அழைத்து வாருங்கள்!

## நாமலுக்கு பிரதி அமைச்சர் சவால்

கொழும்பு, மே. 25

முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு எதிராக நீதிமன்றம் பிறப்பித்துள்ள பிடியாணை உத்தரவைத் தொடர்ந்து, முடிந்தால் அவரை மீண்டும் நாட்டுக்கு அழைத்து வருமாறு பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன சவால் விடுத்துள்ளார்.

பொது நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு எதிராக என்னதான் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டாலும் அவர்களுக்கு எதிராக எந்தவொரு சட்ட நடவடிக்கையும் எடுக்க முடியாது என கடந்த காலங்களில் வலுவான கருத்துக்கள் நிலவி வந்ததாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், அண்மைய நீதிமன்ற உத்தரவுகள் மற்றும் அவர்களுக்கு எதிராக நிலுவையில் உள்ள பல சட்ட வழக்குகள் காரணமாக, ராஜபக்ஷ குடும்பத்தின் மீதான சட்ட ரீதியான அழுத்தங்கள் தற்பொழுது தீவிரமடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஜனாதிபதி மற்றும் பொதுத்தேர்தல்களின் போது, ஊழல் நிறைந்த நிர்வாகத்திற்கு எதிராக நாட்டு மக்கள் ஏற்கனவே தங்களின் தீர்ப்பை வழங்கிவிட்டதாகக் குறிப்பிட்ட பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன, கடந்த காலங்களில் ஊழல் குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய அனைத்து நபர்களுக்கும் எதிராக வரும் காலங்களில் கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என உறுதியளித்துள்ளார். (அ)

## மத்திய வங்கியின் நாணய அச்சிடல் 2.1 ட்ரில்லியன் ரூபாவை தாண்டியது

கொழும்பு, மே. 25

இலங்கை மத்திய வங்கியின் ஒருங்கிணைந்த நாணய அச்சிடல் 2.1 ட்ரில்லியன் ரூபாவைத் தாண்டியுள்ளதாக இலங்கை மனித உரிமைகளுக்கான நிலையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக, கடந்த 17 மாத காலப்பகுதியில் மட்டும் புழக்கத்திலிருந்த நாணயத்தின் அளவு 303,956 மில்லியன் ரூபாவினால் அதிகரித்துள்ளதாக அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை மனித உரிமைகளுக்கான நிலையம் என்ற கடிதத் தலைப்பின் கீழ் விடுத்துள்ள ஊடக அறிக்கையொன்றில், அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரஞ்ஜித் கீர்த்தி தென்னக்கோன் நேற்று இத்தகவலை வெளிப்படுத்தியுள்ளார்.

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட வாராந்த பொருளாதார குறிகாட்டிகளின் தரவுகளை பகுப்பாய்வு செய்து, பணப்புழக்கம் அதிகரித்துள்ள விதம் குறித்து அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையின்படி, 2025 ஜனவரி நிலவரப்படி ஒருங்கிணைந்த பரந்த பணப்புழக்கம் 14,439.1 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டதுடன், அது 2026 மார்ச் மாதமாகும்போது 16,585.7 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.

இதற்கமைய, கடந்த 15 மாதங்களில் மட்டும் பணப்புழக்கமானது 2,146.1 பில்லியன் ரூபாவினால் அதிகரித்துள்ளது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## அவுஸ்திரேலியா, நியூசிலாந்துக்கு அமைச்சர் விஜித ஹேரத் பயணம்

கொழும்பு, மே. 24

வெளிநாட்டு விவகாரங்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், நியூசிலாந்து மற்றும் அவுஸ்திரேலிய அரசாங்கங்களின் அழைப்பின் பேரில் மே 26 முதல் ஜூன் 3 ஆம் திகதி வரை இரு நாடுகளுக்கும் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இந்த விஜயத்தின்போது, இருதரப்பு நலன்கள் சார்ந்த விடயங்கள் குறித்து கலந்துரையாடுவதற்கும், நாடுகளுக்கு இடையிலான இராஜதந்திர உறவுகளை வலுப்படுத்துவதற்கும் அமைச்சர் ஹேரத், வெளிவிவகார அமைச்சர்களான வின்ஸ்டன் பீட்டர்ஸ் மற்றும் பென்னி வாங் ஆகியோருடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், இரு நாடுகளிலுமுள்ள சிரேஷ்ட அரசாங்கப் பிரதிநிதிகள், அதிகாரிகள், வர்த்தகத் தலைவர்கள், கல்வியாளர்கள், சிந்தனைக் குழுக்கள் மற்றும் இலங்கை சமூகத்தின் உறுப்பினர்களையும் அமைச்சர் சந்திக்கவுள்ளார்.

நியூசிலாந்து விஜயத்தின் முக்கிய சிறப்பம்சமாக, வெலிங்டனில் உள்ள இலங்கை தூதரகம் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்படவுள்ளது.

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சின் தகவல்படி, இந்த விஜயமானது நியூசிலாந்து மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய இரு நாடுகளுடனும் இலங்கைக்கு உள்ள நீண்டகால உறவுகளை மேலும் வலுப்படுத்துவதுடன், பரஸ்பர நலன் சார்ந்த துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்தும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

## மீனவர்கள் அவதானம்

கொழும்பு, மே. 25

புத்தளம் முதல் கொழும்பு, காலி ஊடாக ஹம்பாந்தோட்டை வரையிலான கடற்பரப்புகளில் எதிர்வரும் 24 மணிநேரத்தில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என கடல் வானிலை அறிக்கையொன்றினை வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் தென்மேற்குத் திசையிலிருந்து மணிக்கு 30-40 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என்றும், சில பகுதிகளில் அது மணிக்கு 50-60 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக்கூடும் என்றும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

காங்கேசந்துறை முதல் புத்தளம், கொழும்பு, காலி, அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகள் அவ்வப்போது கொந்தளிப்பாக காணப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## ஆறு மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு, மே. 25

தொடரும் சீரற்ற வானிலை காரணமாக, நாட்டின் 6 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டிருந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் நேற்று மாலை 5 மணிக்கு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, கேகாலை மாவட்டத்தின் தெஹியோவிட்ட, தெரணியகல, ருவான்வெல்ல, யட்டியாந்தோட்டை, இரத்தினபுரி மாவட்டத்தின் குருவிட்ட, இரத்தினபுரி, அயகம மற்றும் எஹலியகொட ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு இரண்டாம் நிலை மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கொழும்பு மாவட்டத்தின் சீதாவக்க, பாதுக்க, கம்பஹா மாவட்டத்தின் அத்தனகல்ல, களுத்துறை மாவட்டத்தின் பாலிந்தநுவர, மத்துகம, இங்குரிய, புளத்சிங்கள, அகலவத்தை, ஹொரண, கேகாலை மாவட்டத்தின் புலத்கொஹூபிட்டிய, நுவரெலியா மாவட்டத்தின் அம்பகமுவ, இரத்தினபுரி மாவட்டத்தின் கிரிஎல்ல, பெல்மதுல்ல, நிவித்திகல, எலபாத மற்றும் கலவானை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு முதலாம் நிலை மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

## முல்லைத்தீவில் விபத்தை ஏற்படுத்திய பஸ்ஸின் வழி அனுமதிப்பத்திரம் ரத்து!

யாழ்ப்பாணம், மே. 25

அண்மையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்திய வெளிமாகாணத்தைச் சேர்ந்த தனியார் பஸ்ஸின் வழி அனுமதிப் பத்திரம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர், பொறியியலாளர் சூ.விமலேஸ்வரன் அறிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மையில் இடம்பெற்ற வீதி விபத்தொன்றில், வெளிமாகாணத்திலிருந்து வந்த தனியார் பஸ் இரண்டு நபர்கள் மீது மோதியிருந்தது. விபத்தை ஏற்படுத்திய பின்னர் பொறுப்பற்ற விதத்தில் அந்த பஸ் அங்கிருந்து தப்பிச் செல்ல முற்பட்ட சந்தர்ப்பத்திலேயே மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளது. குறித்த பஸ்ஸின் சாரதிக்கு எதிரான உரிய சட்ட நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தச் சம்பவம் தொடர்பிலும், பயணிகளின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டும், வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை உடனடியாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டுசென்று குறித்த பஸ்ஸ/க்கு எதிராக முறைப்பாட்டைப் பதிவு செய்திருந்தது.

இந்த முறைப்பாட்டுக்கு அமைவாகத் துரித நடவடிக்கை மேற்கொண்டுள்ள தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, விபத்தை ஏற்படுத்திய தனியார் பஸ்ஸின் அனுமதிப் பத்திரத்தை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இடைநிறுத்தியுள்ளதாக அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், போக்குவரத்துச் சட்டங்களை மீறுவோருக்கு எதிராகத் தொடர்ந்தும் இவ்வாறான கடுமையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என அதிகார சபையின் தலைவர் பொறியியலாளர் சூ.விமலேஸ்வரன் தனது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ)

## வேலணையில் சுத்திகரிக்கப்பட்ட நன்னீர் ஐஸ்கட்டி நிலையம் திறப்பு

யாழ்ப்பாணம், மே. 25

வேலணை துறையூர் கிராமிய கடற்றொழில் அமைப்பின் சுத்திகரிக்கப்பட்ட நன்னீர் ஐஸ்கட்டி உற்பத்தி நிலையம், கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரின் தலைமையில் நேற்று உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

மீனவர் சமூகத்தின் தொழில் முன்னேற்றம், வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் வடக்கின் கடல்சார் பொருளாதார வளர்ச்சியை வலுப்படுத்தும் நோக்கில் இந்த உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

மீன்வளப் பொருள்களின் தரத்தைப் பாதுகாப்பது தற்போதைய கடற்றொழில் துறையில் மிக முக்கியமான சவாலாக காணப்படுகின்றது.

குறிப்பாக சந்தைகளுக்கும் ஏற்றுமதிக்கும் அனுப்பப்படும் மீன்களின் தரம் பாதுகாக்கப்படுவது அதன் விலை, சந்தை நம்பிக்கை மற்றும் வருமானத்துடன் நேரடியாக தொடர்புடையதாகும்.

இதனை கருத்தில் கொண்டு சுத்திகரிக்கப்பட்ட நன்னீரைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் தரமான ஐஸ்கட்டிகளை மீனவர்களுக்கு வழங்கும் வகையில் இந்த நிலையம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த உற்பத்தி நிலையம் மூலம் வேலணை மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள மீனவர்கள் தரமான ஐஸ்கட்டிகளை குறைந்த செலவில் பெற்றுக்கொள்ளும் வசதி ஏற்படுவதோடு, மீன்களை நீண்ட நேரம் தரமாகப் பாதுகாக்கும் வாய்ப்பும் உருவாகியுள்ளது. (அ)

## பளைப் பகுதியில் சட்டவிரோதமாக ஏற்றி செல்லப்பட்ட 22 மாடுகள் மீட்பு

கிளிநொச்சி, மே. 25

கிளிநொச்சி - பளை பகுதியில் சட்டவிரோதமாக கொண்டு செல்லப்பட்ட 22 மாடுகள் மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவினரால் மீட்கப்பட்டுள்ளன.

கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் முகமாலை பகுதியில் வைத்து மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது,

கிளிநொச்சி - முட்கொம்பன் பகுதியிலிருந்து, யாழ்ப்பாணத்திற்கு அனுமதிப் பத்திரங்கள் இன்றி சட்டவிரோதமாக பாரவூர்தியொன்றில் கடத்திச் செல்லப்பட்ட மாடுகள் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். இதன்போது 43 வயதான பாரவூர்தி சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார்.

மீட்கப்பட்ட 22 மாடுகளும் பொலிஸ் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவினர் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.05.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.